**தலைப்பு 201 – பௌத்த அலுவல்கள் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 201 – பௌத்த அலுவல்கள் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பௌத்த அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 யூன் 11 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 ஆகஸ்ட் 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌத்த அலுவல்கள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் 04 செலவின விடயங்களுக்காக நிதியேற்பாடு செய்யப்பட்ட ரூபா 68,451,000 தொகையில் ரூபா 29,205,412 சேமிக்கப் பட்டிருந்ததுடன் அந்த சேமிப்பு 26 சதவீதத்திற்கும் 63 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 66 கீழ் நிதியேற்பாடுகள் மாற்றப்பட்ட போதும் எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்படாமையினால் இந்த சேமிப்பு ஏற்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. | மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாடு போதியளவில் இல்லாதிருந்ததை உறுதிப்படுத்திய பின்னர் நிதியேற்பாடுகளை மாற்றுவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மதிப்பீடு தயாரிக்கும் நலிவான தன்மையின் காரணமாக 06 செலவின விடயங்களுக்காக வருடாந்த பாதீட்டு நிதியேற்பாடு மற்றும் மொத்த தேறிய நிதியேற்பாடுகளுக்கு இடையே முரண்கள் ஆரம்ப மதிப்பீட்டின் வீதமாக 61 சதவீதம் முதல் 525 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது. | நாட்டில் காணப்பட்ட நிலைமை மற்றும் செலவின முகாமைத்துவம் தொடர்பாக திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல், சில செலவின விடயங்களுக்கு மேலதிகமாக நிதியேற்பாடு வழங்க வேண்டி ஏற்பட்டமை, அநேகமான பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் உயர்வடைந்து சென்ற நிலைமையின் கீழ் பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாடு போதியளவில் இல்லாமையின் காரணத்தால் ஆரம்ப மதிப்பீட்டிற்கும் திருத்தப்பட்ட செலவின மதிப்பீட்டிற்கும் இடையே முரண்கள் ஏற்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | இயலுமான வரை சரியாக செலவின மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பௌத்த கலைக்களஞ்சியத்தை அச்சிடுவதற்காக ரூபா 05 மில்லியன் மீண்டெழும் நிதியேற்பாடும், சாசன பாதுகாப்பு சபைக்கு வசதிகளை வழங்குவதற்கான ரூபா 01 மில்லியன் மூலதன நிதியேற்பாடும் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்ததுடன் பௌத்த கலைக்களஞ்சியம் அச்சிடுவதற்கான மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டை ரூபா 1.72 மில்லியன் ஏனைய செலவின விடயத்திற்காக மாற்றப்பட்டிருந்தது. | பௌத்த கலைக்களஞ்சிய வெளியீட்டைத் தயாரிக்கும் பணிகள் இறுதிக் கட்டத்தில் காணப்படுவதினால் அதை புத்தகமாக அச்சிடுவதற்கும், ஆசிரியர் குழுவின் சம்பளம் செலுத்துவதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் உப ஆசிரியர் குழுக்கள் ஓய்வு பெற்றுச் சென்றமை, பிரதி ஆசிரியர் குழுக்கள் வெளிநாடு சென்றமை, பிரதான ஆசிரியர்களின் ஒப்பந்த சேவைக்காலம் நீடிக்கப்படாமை போன்ற விடங்களின் காரணமாக நிதியேற்பாடு சேமிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | இயலுமான வரை சரியாக செலவின மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்திற்கு உரித்தல்லாத செலவின விடய இலக்கம் 201-126-2-7-35-2401/12-p இன் கீழ் ரூபா 969,405 பெறுமதி உடைய பொறுப்புக்கள், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு SA-92 திறைசேரி அச்சிடல் குறிப்புக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக திறைசேரிக்கு அறிவிக்கும் போது அந்த அச்சிடலைச் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய தவறை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரச கணக்குகள் பணிப்பாளர் நாயத்திற்கும், தேசிய வரவு செலவுத்திட்ட பணிப்பாளர் நாயகத்திற்கும் பிரதியுடன் கல்வி அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் மீண்டும் விசாரணை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | தாமதம் இன்றி திறைசேரிக்கு அறிவித்து திறைசேரி அச்சிடல் பிரதிகளை சரிசெய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக வினைத்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றை தயாரித்து பேணிச் செல்வதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் அந்த முறைமையின் வினைத்திறன் தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினைச் செய்து அதன் பிரகாரம் முறைமையை ஆக்கபூர்வமாக கொண்டு செல்வதற்காக தேவையான மாற்றங்கள் மேற்கொள்ள வேண்டி இருக்குமாயின் அந்த மீளாய்வினை மேற்கொண்டு எழுத்துமூலம் தயாரித்து அதன் பிரதி ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை. | எதிர்காலத்தில் ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றை பேணிச் செல்லல் தொடர்பாக மீளாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | உள்ளகக் கணக்காய்வு இலக்குகளை உரிய பிரகாரம் அமுல் படுத்துவதற்காக வினைத்திறனான திட்ட முறைமை ஒன்றை ஏற்படுத்துவதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் பிரகாரம் அந்த தேவை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | 2018 முதல் 2023 ஆம் ஆண்டு வரை ஐயவினாக்களுக்காக பதிலளிக்கப்பட்டிருந்ததுடன் வெளி நிறுவனங்களான விகாரைகள் மற்றும் தேவாலயங்கள் தொடர்பான கணக்காய்வு ஐயவினாக்களுக்காக பதிலளித்தல் தாமதம் அடைந்துள்ளதாகவும் அந்த நிறுவனங்களுக்கு மீள் நினைவூட்டல் கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இந்த நலிவுகளை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.4 சட்டங்கள் , விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

**அவதானிப்பு**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் | பெறுமதி ரூபா | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (i) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV அத்தியாயத்தின் 4.2.5, 4.4, 4.5, 4.6 மற்றும் 6.3 ஆம் பிரிவுகள் | 288,844 | ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்கள் இருவரிடம் இருந்து 01 இற்கும் 02 வருடங்களுக்கும் இடையிலான காலத்தில் இருந்து அறவிட வேண்டியதாகக் காணப்படுகின்ற ரூபா 174,454 கடன் மீதி மற்றும் மரணமடைந்த இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து 02 இற்கும் 03 வருடங்களுக்கும் இடையிலான காலத்தில் இருந்து அறவிட வேண்டியதாகக் காணப்படுகின்ற ரூபா 114,390 கடன் மீதி என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 35,690 கடன் தொகையை ஓய்வூதியப் பணிக்கொடையில் இருந்து அறவிடுவதற்கு ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன் ரூபா 138,764 தொகை 2024 மார்ச் 19 ஆம் திகதி ஓய்வூதியத்தில் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் மரணமடைந்த உத்தியோகத்தரிடம் இருந்து உத்தியோகத்தரின் கடன் மீதி மரணப் பணிக்கொடையில் இருந்து அறவிடுவதற்காகவும் ஓய்வூதியத் திணைக்களத்தின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | | |
| * நிதிப்பிரமாணம் 104(4) | - | இழப்பு நட்டம் ஏற்பட்ட திகதியில் இருந்து மூன்று மாதங்களுக்குள் முழுமையான அறிக்கை ஒன்று சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டில் விபத்துக்கு உட்பட்ட இரண்டு வாகனங்கள் தொடர்பாகவும் மற்றும் குருநாகல் பிரதேச அலுவலகத்தில் லப்டப் இயந்திரம் ஒன்று தொலைந்தமை தொடரபாகவும் பூரண அறிக்கை சமர்ப்பிப்பதற்கு முறையே 02 மாதங்கள், 05 மாதங்கள் மற்றும் 18 மாதங்கள் தாமதிக்கப்பட்டிருந்தது. | பரிசோதனை நடாத்தும் போது ஏற்பட்ட தாமத்தின் காரணமாக தாமதம் அடைந்திருந்த முழுமையான அறிக்கை தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்காலத்தில் இவ்வாறான தாமங்களை தடுத்துக் கொள்வதற்காகவும் நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| * நிதிப்பிரமாணம் 1647(ஆ) மற்றும் 128(ஊ) | - | திணைக்களத்துக்குச் சொந்தமான வாகனங்கள் மற்றும் அதற்குரிய உபகரணங்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் போதும் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இதற்காக 2024 ஆம் ஆண்டின் போது வாகன மெய்மையாய்வு சபை ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் அந்த அந்த பிரிவுகளின் பொருள் பதிவேட்டுப் புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டிருந்த பொருட்கள் தெளிவாக இனங்காணக் கூடிய வகையில் தொடர் இலக்கம், பெறுவனவுக் கட்டளை இலக்கம் போன்ற தகவல்கள் உள்ளடக்கப்படாமையின் காரணமாக ஏனைய பிரிவுகள் மற்றும் அலுவலகங்களுக்கு மாற்றும் போது | உரிய பொருள் வகைகளில் தொடர் இலக்கம் மற்றும் பெறுவனவுக் கட்டளை இலக்கம் போன்ற தகவல்களை உள்ளடக்குவதற்கு சொத்துக்கள் முகாமைத்துவம் மற்றும் பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் தொடர்பாக மிகவும் முறையான விதத்தில் புத்தகங்களை பேணிச் செல்வதற்கும் மற்றும் அவற்றின் | பொருள் பதிவேடு புத்தகங்கள் சரியாகவும் விளக்கமாகவும் பேணிச் செல்லப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மற்றும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக வெளியில் எடுத்துச் செல்லும் போதும் பொருட்களின் அடையாளம் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு வசதியீனமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | பாதுகாப்புத் தொடர்பாக போதியளவான ஏற்பாடுகளை வழங்குவதற்கும் பிரிவுத் தலைவர்களுக்கு விசேடமாக அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |

### 3.2 அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணைக் கட்டளைச் சட்டத்தின் 612 ஆம் அதிகாரத்தில் வருகின்ற அரசாங்கத்தின் உத்தியோகத்தர்களின் பிணைக் கட்டளைச் சட்டம் மற்றும் இலங்கை சனநாய சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 881 இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் அந்த பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதியில் இருந்து அல்லது இடம் மாற்றப்பட்ட திகதியில் இருந்து இரண்டு மாதங்களுக்குள் பிணை வைக்க வேண்டிய போதிலும் பிணை வைக்க வேண்டிய 07 உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைப் பணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிணை வைப்பைச் செய்யாதுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைப் பணத்தை வைப்புச் செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 முகாமைத்துவ வலிவுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1931 இன் 19 ஆம் இலக்க விகாரை தேவாலயங்கள் கட்டளைச் சட்டத்தின் 4(1) பிரிவின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற வழிபாட்டுத்தலங்கள் 254 இல் 211 வழிபாட்டுத்தலங்களில் எதிர்வுகூறப்பட்ட பாதீட்டு அறிக்கையும், 244 வழிபாட்டுத்தலங்களில் அரை ஆண்டு வருமான செலவின அறிக்கையும் பெற்றுக் கொள்வதற்கு திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 1931 இன் 19 ஆம் இலக்க விகாரை தேவாலயங்கள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் உரிய பாதீட்டு அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற்கு மீள் நினைவூட்டல் கடிதம் அனுப்பட்டுள்ளதாகவும் 2024 ஆம் ஆண்டில் இருந்து இது தொடர்பான குறைபாடுகளை மாற்றியமைத்து வழிபாட்டுத்தலங்களில் இருந்து பாதீட்டு அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்குமாறு உரிய பிரிவுத் தலைவருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எதிர்வு கூறப்பட்ட பாதீட்டு அறிக்கை மற்றும் அரை ஆண்டு வருமான செலவின அறிக்கையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மகாநாயக்க சாரிகாராம கட்டிடம் திணைக்களத்தால் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் உரிய காணியின் உரித்து இந்த அறிக்கைத் திகதி வரையிலும் திணைக்களத்திற்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. | திம்பரிகஸ்யாய பிரதேச செயலாளரால் காணி அளவிடல் மேற்கொண்டு வரைபடம் தயாரிக்குமாறு கோரி கொழும்பு மாவட்ட சிரேஸ்ட நில அளவையாளர் அதிகாரிகளுக்கு உரிய அளவிடல் கோரிகைப் பிரதி இரண்டுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ள உரிய காணியின் உரித்தைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | களனி ஈரியவெட்டியவில் தஸ சில் மாதா தலைமையகம் நிர்மாணிக்கப்பட்ட காணி 2012 ஆம் ஆண்டின் போது திணைக்களத்திற்கு கையேற்பதற்கு மரியாதைக்குரிய மெலமிட்டியாவே குசலதம்ம நாயக்க தேரரின் விருப்பம் பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருக்கும் போது 11 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் இதுவரை காணியைக் கைப்பற்றும் நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்து சட்ட ரீதியான உரித்து உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | காணி கைப்பற்றல் தொடர்பாக தயாரிக்கப்பட்ட ஏழாவது பிரிவின் கீழ் அறிவித்தல் தமிழ் மற்றும் ஆங்கில மொழி பெயர்ப்புச் செய்து தற்போது அரச வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக அரசாங்க அச்சகத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளதாக களனிப் பிரதேச செயலாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ள உரிய காணியின் உரித்தைக் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | முன்னாள் உத்தியோகத்தர் இடம் மாற்றம் பெற்றுச் சென்றதன் காரணமாக இரத்தினபுரி பிரதேச அலுவலகத்தின் உதவி ஆணையாளர் பதவியில் கடமையை மேவுகை செய்வதற்காக 2022 நவம்பர் முதல் நியமிக்கப்பட்ட உதவி ஆணையாளர் (நிருவாகம்) இற்கு அதற்குரிய கடமை நடவடிக்கைகளுக்காக வாரத்திற்கு 02 நாட்கள் குழாம் வாகனத்தை பயன்படுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அவரால் அதற்கு மேலதிகமான நாட்கள் குழாம் வாகனத்துடன் இரத்தினபுரி பிரதேச அலுவலகத்திற்கு வழங்கப்பட்ட வாகனத்தையும் ஓட்டத்தில் ஈடுபடுத்தி இருந்ததுடன் 2022 நவம்பர் முதல் 2023 திசெம்பர் வரை குழாம் வாகனம் கிலோமீற்றர் 15,759 உம், இரத்தினபுரி பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்ட வாகனம் கிலோமீற்றர் 7,978 உம் | எரிபொருள்களை சிக்கனமாக பயன்படுத்தும் நோக்காகக் கொண்டு சில உத்தியோகத்தர்கள் பங்குபற்றுகின்ற கடமை நிகழ்ச்சித் திட்டங்களுக்காக முன்னாள் ஆணையாளர் நாயகத்தால் பொதுவில் வாகனங்கள் பயன்படுத்தி ஏனைய உத்தியோகத்தர்களுடன் கடமையில் ஈடுபட்டதாகவும் முன்னாள் உதவி ஆணையாளர் (நிருவாகம்) இனால் வாரத்திற்கு இரண்டு நாட்களுக்கு மேற்பட்ட எண்ணிக்கைக்காக குழாம் வாகனம் மற்றும் இரத்தினபுரி மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் ஓடுவதற்காக வாகனம் பயன்படுத்தப்பட்டதை ஏற்றுக்கொள்வதுடன் இது தொடர்பாக மேலும் உரிய உத்தியோகத்தரிடமிருந்து தனிப்பட்ட விளக்கமளித்தல் மற்றும் தகவல்களைப் பெற்றுக் | அங்கீகாரத்தின் பிரகாரம் குழாம் வாகனங்களை பயன்படுத்துவதற்கும், எரிபொருள் செலவினங்களை கட்டுப்படுத்தி முறையான பிரகாரம் மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆக 23,737 கிலோமீற்றர் ஓட்டத்திற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | கொள்வதற்கும் நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (உ) | 2006 இன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்குப் புறம்பாக போட்டியாளர் விலை கோராமல் சிறுவர் திறன் மதிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் சுற்றறிக்கை மற்றும் மாதிரிப் படிவங்கள், நுழைவுப் பத்திரங்கள், கால அட்டவணைகள் அச்சிடுவதற்காக ரூபா 2,740,979 தொகையும், அழைப்பிதழ் பத்திரங்களை அச்சிடுவதற்காக ரூபா 252,540 தொகையும், சான்றிதழ் பத்திரங்களை அச்சிடுவதற்காக ரூபா 1,746,345 தொகையுமாக கூட்டுமொத்தமாக ரூபா 4,739,864 தொகை அச்சிடல் செலவினம் செய்யப்பட்டிருந்ததுடன் விருந்தினர்களை அழைப்பிதழ்களுக்காக கடிதம் அனுப்பி இருக்கும் போது விழாவிற்கு 02 நாட்களுக்கு முன் அழைப்பிதழ் பத்திரம் 1500 அச்சிடுவதற்கான ரூபா 252,540 பயனற்ற செலவினம் ஒன்று செய்யப்பட்டிருந்தது.<br><br>மேலும் தேவையான சான்றிதழ் பத்திரங்களின் அளவு மதிப்பீடு செய்யப்படாமல் ரூபா 45,422 தொகையினால் மூன்றாவது கட்டத்திற்கான சான்றிதழ் பத்திரம் 2788 மேலதிகமாக அச்சிடப்பட்டிருந்ததுடன் அந்த மேலதிக சான்றிதழ்கள் பயன்படுத்த முடியாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக மேலதிக நேரம் மற்றும் போக்குவரத்துச் செலவினங்கள் தவிர செலவிட வேண்டி ஏற்பட்டிருந்த செலவினம் ரூபா 41,608,881 ஆக காணப்பட்டது. | அச்சிடல் திணைக்களம் அரசாங்கத்தின் நிறுவனமாக இருந்தமையால் நிதிப்பிரமாணம் 630 இன் பிரகாரம் கூறுவிலை கோரி தேவையான அச்சிடல்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் அறநெறிப் பாடசாலை ஆணையாளர்களுக்கு மேலும் விளக்கமளித்தல் மற்றும் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக சான்றிதழ் பத்திரம் அச்சிடும் போது ஒரு பிரதேச சபைக்காக 41 திறன் பத்திரங்களுக்காக ஆரம்ப நிலையம் மற்றும் அதற்கான 205 சான்றிதழ் தேவையாக இருந்த போதும் ஒவ்வொரு சபைக்காகவும் 210 சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தமையும் மேலதிக சான்றிதழ்கள் வழங்கும் போது தேவையான சான்றிதழ்களின் அளவு, சரியாக எழுதப்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்பட்ட அளவு போன்ற தகவல்களைப் பெற்றுக்கொண்ட பின்னர் மேலதிக சான்றிதழ்களுக்காக கிடைக்கின்ற விண்ணப்பங்களின் போது அந்த வழுக்களுடன் சான்றிதழ்களைப் பெற்று அதற்குப் பதிலாக மீண்டும் சான்றிதழ் பத்திரம் விநியோகித்தல் மேற்கொள்ளப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | அறநெறிப் பாடசாலைகளில் மாணவர் திறன்களுக்காக வினாப்பத்திரம், சுற்றறிக்கை, நுழைவு சீட்டுக்கள் மற்றும் சான்றிதழ் பத்திரங்கள் அச்சிடல் அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிகளுக்கு இணங்க சரியான மதிப்பீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஊ) | 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்குரிய அறநெறிப் பாடசாலைகளில் தரப் பரீட்சைகளுக்காக கேள்விப் பத்திரம் மற்றும் சான்றிதழ் பத்திரம் அச்சிடுவதற்காக ரூபா | அச்சிடல் திணைக்களம் அரசாங்கத்தின் நிறுவனமாக இருந்தமையால் நிதிப்பிரமாணம் 630 இன் பிரகாரம் கூறுவிலை கோரி அச்சிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் | புள்ளிவிபர தகவல்கள் தொடர்பாக சரியான தரவுகளைப் பெற்று அதன் பிரகாரம் அச்சிடல் நடவடிக்கைகளைத் |

| | | | |
|---|---|---|---|
| | 40,203,680 செலவினம் செய்யப்பட்டிருந்தது. மேலும் 2022 ஆம் ஆண்டின் தரமிடல் பரீட்சைகளுக்கு விண்ணப்பித்த மாணவர்களின் எண்ணிக்கை 832,875 ஆக இருந்த போதிலும் அதனை விட 165,609 வினாப் பத்திரங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு தோற்றியிருந்த 645,042 மாணவர்களின் எண்ணிக்கையினை விட சான்றிதழ் பத்திரங்கள் 4,958 அச்சிடப்பட்டமையும் 2021 ஆம் ஆண்டின் போது பரீட்சைக்கு விண்ணப்பத்த மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்களை வைத்துக் கொள்ளாமல் அச்சிடப்பட்ட வினாப்பத்திரங்கள் 1,067,946 இல் 428,578 மற்றும் பரீட்சைக்குத் தோற்றியிருந்த 639,368 ஆன மாணவர்கள் எண்ணிக்கையை விட சான்றிதழ் பத்திரங்கள் 35,632 அச்சிடப்பட்டமையின் காரணமாக ரூபா 6,186,558 பயனற்ற செலவினம் ஒன்று ஏற்பட்டிருந்தது. | அறநெறிப் பாடசாலை ஆணையாளரிடமிருந்து மேலதிக விளக்கங்களைப் பெறல் மற்றும் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | திட்டமிடுவதன் மூலம் பயனற்ற செலவினங்களைத் தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | தரப் பரீட்சைகளுக்காக விநியோகிக்கப்பட்ட சான்றிதழ் பத்திரங்களில் எஞ்சியிருந்த அளவு தொடர்பான எண்ணிக்கை தரவுகளை வைத்து நியாயமான காலத்தின் பின்னர் மிகுதி சான்றிதழ் பத்திரங்களை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் சான்றிதழ் பத்திரங்கள் பயன்படுத்தப்படாமல் இருப்பதற்கான இடமளிக்கப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | எஞ்சியிருந்த சான்றிதழ் பத்திரங்கள் தொடர்பாக பயன்படுத்தப்படாத முறையில் அகற்றுவதற்கு பொருத்தமான வேலைத் திட்டம் ஒன்றை அமுல்படுத்துவதற்கு அறநெறிப் பாடசாலை ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | தரப் பரீட்சை மற்றும் மாணவர் திறன்களின் தேவைகளுக்காக விநியோகிக்கப்படுகின்ற சான்றிதழ் பத்திரங்களை மீளப் பெற்றுக்கொள்வதற்காக உரிய வேலைத் திட்டம் ஒன்றை அமுல்படுத்தி சான்றிதழ் பத்திரங்களின் பயன்படுத்தப்படாமல் இருப்பதை இயலுமானவரை தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | 2023 இன் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரை திணைக்களத்தால் ஆரம்பிக்கப்பட்டிருந்த 309 வழக்கு கோவைகளில் பூர்த்தி செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 121 ஆகும். | நீதிமன்றப் பணிகளில் தாமதம் ஏற்பட்டமை திணைக்களத்தின் சட்டப் பிரிவில் காணப்படுகின்ற மனித வளப் பற்றாக்குறையும் இது தொடர்பில் தாக்கமளித்திருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | வழக்கு நடவடிக்கைகளை துரிதமாக பூர்த்தி செய்வதற்காக திணைக்களம் எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும். |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 முதல் 2023 ஆம் ஆண்டு வரை உள்ளகக் கணக்காய்வாளரால் சமர்ப்பிக்கப்பட்ட 50 கணக்காய்வு ஐயவினாக்களுக்குரிய பரிந்துரைகளை அமுல்படுத்தும் நிலைமை தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்விற்குரிய ஐயவினாக்களுக்காக பதிலளிக்கப்பட்டுள்ளதுடன் வெளி நிறுவனமாக விகாரைகள் மற்றும் தேவாயலங்கள் தொடர்பான கணக்காய்வு ஐயவினாக்களுக்காக தாமதமடைந்துள்ளதாகவும் அது தொடர்பாக அந்தந்த நிறுவனங்களுக்கு மீள் நினைவூட்டல் கடிதம் சமரப்பிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இந்த குறைபாடுகளை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | உள்ளகப் பிரிவுகளைப் போன்று வெளிநிறுவனங்களான விகாரைகள் மற்றும் தேவாலயங்கள் தொடர்பாக விரைவாக பதிலளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 5. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உதவி ஆணையாளரால் (நிருவாகம்) கடமை மேவுகை செய்யப்படுகின்ற இரத்தினபுரி பிரதேச அலுவலகத்தில் உதவி ஆணையாளர் பதவி வெற்றிடமாகி 19 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் உள்ளபடியான உத்தியோகத்தர் இடம் இருந்து அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | உரிய வெற்றிடங்களை நிரப்புமாறு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கும், அரச நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சின் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | விரைவாக வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2023 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு திணைக்களத்தின் 848 அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையில் 83 பதவிகள் வெற்றிடமாகக் | இலங்கை நிருவாக சேவையில் வெற்றிடங்கள் தொடர்பாக அறிவிப்பதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கும் திணைக்களத்தில் காணப்படுகின்ற வெற்றிடங்கள் தொடர்பான அறிக்கை ஒன்று புத்தசாசன, சமய | விரைவாக வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டதுடன் அதில் மேலதிக ஆணையாளர் நாயகத்தை உள்ளடக்கிய பிரதி மற்றும் உதவி ஆணையாளர்களில் 06 பதவிகள், 22 அபிவிருத்தி உதவியாளர் பதவிகள் மற்றும் 13 முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் பதவிகள் காணப்பட்டது. | மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சிற்கும் அனுப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. திணைக்களமயப்படுத்தப்பட்ட பதவிகளான பௌத்த அலுவல்கள் இணைப்பாளர் மற்றும் அபிவிருத்தி உதவியாளர் பதவிகளில் ஈடுபடுகின்றவர்கள் தனிப்பட்டரீதியில் அங்கீகரிக்கப்பட்டுள்ளமையால் புதிய ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படாதிருந்தமையும் அந்த உத்தியோகத்தர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்ப்பு செய்வதன் பிரகாரம் நீக்கப்படுவதாகவும் முகாமைத்துவ சேவை உத்தியோகதர்களின் வெற்றிடங்கள் தொடர்பாக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவித்து புதிய ஆட்சேர்ப்பு மேற்கொள்ளும் போது இந்த திணைக்களத்திற்கும் நியமிக்குமாறும் கோரப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | 2001 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய இலக்கம் 18/2001 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கையின் 05 வருடங்களில் ஒரே சேவை நிலையத்தில் சேவையாற்றிய ஒவ்வொரு உத்தியோகத்தரும் வேறொரு சேவை நிலையங்களில் சேவையாற்றுவற்கு இடமளிப்பதற்காக இடமாற்றம் அமுல்படுத்த வேண்டிய போதிலும் திணைக்களத்தில் 05 வருடங்கள் முதல் 18 வருடங்களுக்கு மேற்பட்ட வருடங்கள் பூர்த்தி செய்த 371 உத்தியோகத்தர்களுக்காக இடமாற்றம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் வருடாந்த உள்ளக இடம்மாற்ற கட்டளை விநியோகிக்கப்பட்டுள்ளதுடன் 2024 மே 02 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் இடமாற்றங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |